தலைப்பு 226 – குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 226 – குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 யூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்தெம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்கான குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் துறைமுகம், பிரஜாவுரிமை, வீசா மற்றும் கடவுச்சீட்டுப் பிரிவுகளுக்குரிய காசுப் புத்தகம் மற்றும் கணினி முறைமையின்படி வருமானத்தை ஒப்பிடுகையில், வருமானத்தில் ரூபா 116,501,586 வித்தியாசம் காணப்பட்டதுடன், வெளிநாட்டுத் தூதரகப் பிரிவின் ஏப்ரல், மே, ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான கணினி முறைமையின்படி வருமானம்	காசுப் புத்தகம் மற்றும் கணினி முறைமைக்கு இடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்களாக விமான நிலையத்தில் பட்டுப் பாதை மற்றும் தங்கப் பாதை ஆகியவற்றைப் பயன்படுத்தும் போது, பயணிகளின் அனுமதிப்பத்திர நடவடிக்கைகளுக்காக Airport & Aviation Sri Lanka (Pvt) Ltd நிறுவனத்தால் திணைக்களத்திற்கு காசோலைகள் மூலம்	காசுப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட வருமானமும் கணினி முறைமையின் படியான வருமானமும் ஒப்பிட்டு, சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும்.

பதியப்படவில்லை என்பதால், கணக்காய்வின் போது மொத்த வருமான வித்தியாசத்தைக் கணக்கிட முடியவில்லை. இவ்வாறு நாளதுவரையாக்கப்பட்ட மற்றும் சரியான தகவல்களைப் பெற முடியாத கணினி முறைமைகளுக்காக, திணைக்களமானது 22 வருடங்களாக பழைய ஒப்பந்தங்களைப் புதுப்பித்து கட்டணங்களைச் செலுத்தி வந்துள்ளது.	அனுப்பப்படும் வருமானத்தை காசுப் புத்தகத்தில் செலவு வைத்து கணினி முறைமையில் உள்ளீடு செய்யாமை அமெரிக்க டொலர்களில் அறவிடப்பட்ட நிதியைப் காசுப் புத்தகத்தில் ரூபாயில் பதிவு செய்துள்ளமையும், அந்த வருமானத்தை கணினி முறைமையில் டொலர்களின் கீழ் உள்ளீடு செய்துள்ளமை சில சந்தர்ப்பங்களில் கணினி முறைமையில் ஏற்படும் கோளாறுகள் மின்னணு கட்டண நுழைவாயில்கள் மற்றும் அட்டைகள் மூலமான அறவீடுகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் அறவிடப்பட்ட பணம் (ரூபாய்) திணைக்களக் கணக்கிற்கு அறவிட்ட திகதிக்குப் பின்னர் தொடக்கம் வேலை நாளில் கிடைப்பதனால், அந்த வருமானத்தை காசுப் புத்தகத்தில் பணம் அறவிட்ட திகதிக்குப் பிந்தைய ஒரு நாளில் பதிவு செய்தமை போன்றன காரணங்களாகச் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும், எதிர்காலத்தில் பரிவர்த்தனைகள் நடந்த திகதியிலேயே அந்த வருமானத்தை காசுப் புத்தகத்தில் உள்ளீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.	

(ஆ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவு மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	பொது வைப்புப் பேரேட்டில் உள்ள வைப்பு இலக்கம் 6000-0-0-16-0-59 ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்தற் தொகைகள் தொடர்பில் 2024 மே 31 ஆம் திகதிய வைப்புப் பெறுமதியான ரூபா	இந்தக் அவதானிப்புடன் உடன்படவில்லை என்றும், பொது வைப்புப் பேரேட்டில் உள்ள வைப்பு இலக்கம் 6000-0-0-16-0-59 ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்தற்	பொது வைப்புப் பேரேடு சரியாகப் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும்.

	3,775,195 ஆன தொகை ஆண்டின் இறுதியில் பொது வைப்புப் பேரேட்டில் கொடுப்பனவாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், திறைசேரி அச்சிட்ட குறிப்பு மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிறுதி கணக்கு இணக்க கூற்றின் பிரகாரம் அந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தொகைகளான ரூபா 3,775,195 ஆன தொகை ITMIS முறைமையில் 2024/12/06 அன்று உள்ளீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்தக் கொடுப்பனவைச் செய்வதற்கான கட்டுநிதி 2024/12/31 திகதிக்கு முன்னர் கிடைக்காத காரணத்தினால், 2024/12/31 ஆம் திகதி வரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மேலும், அந்தக் கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்படவில்லை என்றும், பொது வைப்புப் பேரேட்டில் உயர் உத்தியோகத்தரொருவரின் சுருக்கக் கையொப்பம் பதியப்படவில்லை என்வும், அதேபோல் 2024 திசெம்பர் கணக்குச் பொழிப்பின் மூலமும் மேற்படி வைப்பிற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்வும், அத்துடன், இந்த பெறுமதி பொது வைப்புப் பேரேட்டின் ஆரம்ப நிலுவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	
(ii)	பொது வைப்புத்தொகைப் பேரேட்டில் ஒப்பந்த இலக்க 6000-0-0-16-0-59 ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்தற் தொகைகளுடன் தொடர்புடைய ஆண்டிற்கான பற்று மதிப்பு ரூ. 4,719,309 ஆக காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றில் (ACA-4) ஆண்டிற்கான பற்று மதிப்பு ரூ. 1,995,015 ஆக காணப்பட்டதுடன் ரூ. 2,724,294 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	பொது வைப்புப் பேரேட்டில் உள்ள வைப்பு இலக்கம் 6000-0-0-16-0-59 ஒப்பந்தங்களுக்கான நிறுத்தி வைத்தற் தொகை தொடர்பில் ஆண்டின் மொத்தப் பற்றுப் பெறுமதி ரூபா 1,995,015 என்வும், அந்தக் கொடுப்பனவுகள் மாதாந்த கணக்குச் பொழிப்பின் மூலம் சரியாகப் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும், பொது வைப்புப் பேரேட்டில் பதிவுசெய்வதில் இருந்த குறைபாடுகள் சீர்செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிக் கூற்றுக்கள் சரிாக தயாரிக்கப்பட்டு பரீட்சித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான திறைச்சேரி குறிப்புகள் (SA-82) இன் பிரகாரம் ஆரம்ப மீதிகளை ஒப்பிடும் போது கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்தின் ஆரம்ப மீதி ரூ. 2 மில்லியனால் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2023.12.31 ஆம் திகதிக்கான கணக்குச் பொழிப்பில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது குறைநிரப்பு கணக்குச் பொழிப்பின் மூலம் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் (Non Residential Building – 9151) இன் கீழ் கணக்கிடப்பட்ட ரூபா 2,000,000 தொகையானது 2023.12.31 ஆம் திகதிக்கான நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பான திறைசேரியின் இறுதி கணக்கு அறிக்கையின்படி (SA-82) காண்பிக்கப்படாமை குறித்து அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், 2023 திசெம்பர் மாத நடைமுறையல்லாச் சொத்துக்கள் அறிக்கை (SA-81) மூலம் மேற்படி சொத்துக்கள் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகள் கணக்கீட்டு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	திறைசேரி குறிப்பு (SA-10) இன் படி, செலவினத் தலைப்பு இலக்கம் 226-1-1-0-2104 கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் இன் கீழ், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களால் ரூபா 2,268,697 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதி மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அறிக்கையில் (SA-82) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	அ குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் கட்டுநாயக்க ஓய்வு அறையில் அவசர மற்றும் அத்தியாவசிய புனரமைப்புப் பணிகள் 226-01-01-2104 இன் கீழ் சேமிக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு ஊடாக மேற்கொள்ளப்பட்டதாகவும், இது ஒரு சொத்து கையகப்படுத்தல் அல்ல, மாறாக ஒரு புனரமைப்பு மட்டுமே என்பதால், நிலையான சொத்துக்களாக கணக்கிடப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.	சரியான பெறுமதி கணக்கிடப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், 07 மீண்டெழும் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 611,200,000 இல், ரூ. 307,037,600 ஆன தொகை நி.பி 66 இன் கீழ் உள்ள பிற செலவினங்களுக்கு மாற்றப்பட்டதுடன் அது 21 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது. அதன் பிரகாரம் செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பது முறையான ஆய்வோடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், முன்கூட்டியே கணிக்க முடியாத தேவைகளுக்கான ஒதுக்கீடுகளை வேறு செலவினத் தலைப்புக்களுக்கு மாற்றும் போது ஏற்பட்ட சேமிப்புக்களுக்கான காரணங்களாக, எழுதுபொருள் விலைகள் குறைவடைந்தமை மற்றும் சிக்கனமாகப் பயன்படுத்தியமை எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தியமை 2024 ஆம் ஆண்டில் மின்சாரத் தடை ஏற்படாததால் பிராந்திய அலுவலகங்களில் மின்பிறப்பாக்கிகளுக்கு எரிபொருள் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லாதமை உபசரிப்புச் செலவுகளைக் கட்டுப்படுத்தியமை மற்றும் தொலைபேசிப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தியமை் மற்றும் வெளிநாட்டுப் பயணச்சீட்டு வழங்குவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் அஞ்சல் செலவுகள் குறைந்தமை போன்றன குறிப்பிடப்பட்டிருந்தன.	செலவின மதிப்பீடுகள் தயாரித்தலானது உரிய ஆய்வுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ)	05 மீண்டெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 533,297,600 தொகையில், ரூ. 217,504,611 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 20 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் வரை வீச்சை கொண்டிருந்தது.	சிறு பராமரிப்புச் செலவுகள் குறைந்தமை, போக்குவரத்து கொடுப்பனவுகள் உரித்தான பதவிகளில் வெற்றிடங்கள் நிலவியமை, பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காகப் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது நிலவிய விலையை விட விலை குறைந்தமை, சேவை ஒப்பந்தப் புதுப்பித்தல்கள் குறைந்தமை, அனைத்து வாகனங்களும் காப்புறுதி செய்யப்பட்டமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டமை, SITA நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்துவதற்குத் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திலிருந்து மேலதிக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலுவைத் தொகையைச் செலுத்துவது தொடர்பான ஆவணங்கள் மற்றும் அங்கீகாரங்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம், எதிர்பார்த்தபடி உத்தியோகத்தர்கள் ஆதனக் கடன்களைப் பெறாமை மற்றும் வருடாந்த இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களில் ஒரு சிலரே ஆதனக் கடன்களைப் பெற்றிருந்தமையினால் ஆதனக் கடன் வட்டி செலுத்தும் செலவுகள் குறைந்தமை போன்றன காரணங்களாகச் குறிப்பிடப்பட்டிருந்தது.	செலவின மதிப்பீடுகள் தயாரித்தலானது உரிய ஆய்வுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(இ)	செலவினத் தலைப்பு இலக்கம் 226-1-1-0-1409 இற்கு ரூபா 160,380,000 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடாகவும், ரூபா 113,117,600 நி.பி 66 இன் கீழ் மாற்றலாகவும் பெறப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் ரூபா 189,306,512 சேமிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, சேமிக்கப்பட்ட தொகை நிகர ஒதுக்கீட்டில் 41	செலவினத் தலைப்பு இலக்கம் 226-1-0-1409 இல் ஆண்டின் இறுதியில் ரூபா 189,306,512 சேமிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்களாக, 2024 ஆம் ஆண்டில் சேவை ஒப்பந்தப் புதுப்பித்தல்கள் குறைந்தமையினால் எதிர்பார்த்த செலவுகள் எழாமை, ஆண்டின் போது விலைமனுக்கள்	செலவுகள் மேற்கொள்ளப்படாமல், செலவினத் தலைப்புகளில் நிதி ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருக்கையில், நி.பி 66 இன் கீழ் மேலும் நிதி ஒதுக்கீடுகளை மாற்றுவதன் மூலம்

	வீதமாகும்.	கோரப்பட்டு குறைந்த விலையில் அனைத்து வாகனங்களும் காப்புறுதி செய்யப்பட்டமை மற்றும் SITA நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய அமெரிக்க டொலர் 525,620 நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்காகத் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திலிருந்து ரூபா 160,380,000 மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2024.12.31 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலுவைத் தொகையைச் செலுத்துவது தொடர்பான ஆவணங்கள் மற்றும் அங்கீகாரங்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் போன்றன குறிப்பிடப்பட்டிருந்தது.	பணத்தைத் நிறுத்தி வைத்திருக்கக் கூடாது.
(ஈ)	மூலதனச் செலவினத் தலைப்புக்கள் 2 இற்காக ரூபா 300,000,000 வீதம் மொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூபா 600,000,000 நிதியிலிருந்து, முறையே ரூபா 157,940,084 மற்றும் ரூபா 148,389,838 சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சேமிப்பு முறையே 53 வீதம் மற்றும் 49 வீதமாகக் காணப்பட்டது.	மூலதன செலவின விடயங்களின் சேமிப்புக்களுக்கான காரணங்களாக சில செயற்திட்டங்களுக்குரிய பெறுகை செயன்முறை மேற்கொள்ளாமை அடிப்படையில் செயற்திட்ட நடவடிக்கைகள் முன் கொண்டு செல்ல முடியாமை மற்றும் சில செயற்திட்டங்களுக்குரிய அடிப்படை விபரக்குறிப்பு தயாரிப்பதற்கு இயலாமையினால் பெறுகைக்கு சமர்ப்பிக்கப்படாமையினால், 2024 ஆம் ஆண்டில் பணிகளை நிறைவு செய்ய முடியாமை, சில செயறதிட்டங்கள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் செயற்திட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாமை, சில திட்டங்களின் பெறுகை நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடியாமை மற்றும் ஆரம்பத் தரவுகளைத் தயாரிக்க முடியாததால் பெறுகைக்காக	செலவின மதிப்பீடுகள் தயாரித்தலானது உரிய ஆய்வுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	சமர்ப்பிக்கப்படாமை என குறிப்பிடப்பட்டிருந்தது.	

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டின் நிதிக் கூற்றில் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள, ஆனால் திறைசேரி குறிப்பில் (SA-92) பதிவு செய்யப்படாத பொறுப்புக்களின் மொத்த மதிப்பு ரூ.1,054,503 ஆக இருந்தது.	கணக்காய்வுடன் உடன்படுகின்றதெனவும், எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொறுப்பு கூற்றுக்களை சரியாக சமர்ப்பிக்க தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொறுப்புக்கள் அறிக்கைகள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	திணைக்களத்தின் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலும், பொறுப்புக்கள் பதிவேட்டிலும், திறைசேரி குறிப்பிலும் (SA-92) உள்ளடக்கப்படாத ரூபா 4,598,740 பெறுமதியான பொறுப்புக்கள் 2025 ஆம் ஆண்டில் வவுச்சர்கள் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.	கணக்காய்வுடன் உடன்படுகின்றதெனவும், எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொறுப்பு கூற்றுக்களை சரியாக சமர்ப்பிக்க தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொறுப்புக்கள் அறிக்கைகள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	திணைக்களத்தின் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலும், பொறுப்புக்கள் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டு, திறைசேரி குறிப்பில் (SA-92) உள்ளடக்கப்படாத செலவினத் தலைப்பு இலக்கம் 226-1-1-0-1402 இற்குரிய மொத்தப் பெறுமதியான ரூபா 675,671 கொண்ட பொறுப்புக்கள் 2025 ஆம் ஆண்டில் வவுச்சர்கள் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.	கணக்காய்வுடன் உடன்படுகின்றதெனவும், எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொறுப்பு கூற்றுக்களை சரியாக சமர்ப்பிக்க தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொறுப்புக்கள் அறிக்கைகள் சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காகப செயற்திறனான் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்துப் பேணி வருவதுடன், அந்த முறைமையை மீளாய்வு செய்து அதன் முன்னேற்றம் குறித்து கணக்காய்வுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும், திணைக்களத்தினால் தொடர்ச்சியான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மூலம் நிதி மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் பிரதியொன்றைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	(i) நி.பி 447(1)	பொது 138 செலவினப் பேரேட்டில் முந்தைய ஆண்டுகளுக்கான கணக்கிடப்பட்ட கடப்பாடுகள் நிரலில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன் சேமிக்கப்பட்டிருந்த சரியான தொகையை அறியும் வகையில் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் குறிப்பிடப்படவில்லை.	நடைமுறை ஆண்டிற்கான கணக்கிடப்பட்ட கடப்பாடுகள் நிரலில் சரியாக அடையாளம் காணப்பட்ட பரிவர்த்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், பதிவாகியுள்ள ஏனைய அனைத்துப் கடப்பாடுகளுக்காகவும் செலவினப் பேரேட்டில் ஒதுக்கீடுகளைத் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், முந்தைய ஆண்டிற்குரிய கடப்பாடுகளை பொது 138 செலவினப் பேரேட்டில் பதிவுசெய்யவும் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	குறித்த நிதி பிரமாணம் பிரகாரம் கடப்பாடுகளை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
	(ii) நி.பி 750(1)	திணைக்களத்திடம் உள்ள வாகனங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களில் அரச சின்னம் வர்ணம் பூசப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறும் வெளிநாட்டவர்களைக் கைது செய்வதற்கும் விசாரணை நடவடிக்கைகளுக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தப்படுவதால்,	குறித்த நிதி பிரமாணம் பிரகாரம் வாகனங்களில் அரச சின்னம் வர்ணம் பூசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

			இந்த வாகனங்களில் அரச சின்னத்தை அச்சிடுவது விசாரணை நடவடிக்கைகளுக்குப் பிரச்சினையாக இருக்கும் என்றும், விசாரணைக்காகத் தொடர்ச்சியாக ஒரே வாகனத்தைப் பயன்படுத்துவது ஒற்றர்களுக்கு அனுகூலமாக அமையலாம் என்றும், தற்போது அனைத்து வாகனங்களிலும் திணைக்களத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பலகைகள் வாகனத்தின் முன் கண்ணாடியின் உள்ளே முன்னால் தெரியும் வகையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.	
(ஆ)	2016 திசெம்பர் 22 திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	திணைக்களத்திற்கு சொந்தமான 02 வாகனங்களை தவிரத்து மற்றைய வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை 2013 ஆம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமான 06 வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், வாகனங்களின் கடமைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு எரிபொருள் பரிசோதனைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	குறித்த சுற்றறிக்கை பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிக்காட்டி கோவையின் 3.5.1 (ஆ) பிரிவு	நேரடி ஒப்பந்த முறைமை விசேட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், மனித வள முகாமைத்துவத்	திணைக்களத்தின் மென்பொருள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் பிரதான நிறுவனம் Informatics நிறுவனம் எனவும், அவர்களின்கீழ்	குறித்த பெறுகை வழிக்காட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தொகுதி பெறுகைக்காக போட்டி பெறுகை முறைமையைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக நேரடி ஒப்பந்த முறைமையைப் பின்பற்றியிருந்தது.

ஏற்கனவே 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மனித வள முகாமைத்துவ முறைமையொன்று இயங்கி வருவதாகவும், மேலும், அந்தத் தொகுதி திணைக்களத்திற்குத் தேவையான பணிகளை மேற்கொள்ளப் போதுமானதாக இல்லை எனவும், எனவே புதிய மனித வள முகாமைத்துவத் தொகுதிக்கான தேவை ஏற்பட்டதாகவும், அதற்கமைய பழைய தொகுதியின் பணிகளையும் உள்ளடக்கி புதிய தொகுதியைத் தயாரிக்க வேண்டியிருந்தமையினாலும், குறிப்பாக இந்தத் தொகுதி ஊடாக வீசா, கடவுச்சீட்டு, பிரஜாவுரிமை, பிரத்தியேகக் கட்டுப்பாடு, உயிரியல் தரவு முறைமைகள், கறுப்புப் பட்டியல் முறைமைகள் போன்றவற்றுக்கான பயனாளர்களை முகாமைத்துவம் செய்யும் முறைமையுடன் ஒருங்கிணைக்கப்படுவதனாலும், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு மற்றும் கணினி முறைமைப் பாதுகாப்புக் காரணங்களையும் கருத்திற்கொண்டு, நேரடி பெறுகைக்காக திணைக்களத்தின் பெறுகை எல்லை ரூபா 200 மில்லியன் என்பதால், ரூபா 29,850,000 இற்கு மேற்படி தொகுதிக்கான கொள்வனவுக்காக Informatics நிறுவனம்

			தெரிவு செய்யப்பட்டதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.	
(ஈ)	2016 ஆகஸ்ட் 15 திகதிய 01/2016 ஆம் இலக்க உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் உள்ளக அலுவல்கள் தொடர்பான சுற்றறிக்கை.	ஒவ்வொரு வருடமும் சனவரி மாதம் 01 திகதியன்று உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் அந்தப் பதவிகளில் இருப்பதை தொடர்புடைய நிறுவன தலைவர்களிடமிருந்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்படவில்லை.	ஒவ்வொரு ஜனவரி 01 திகதியும் அந்தந்த உத்தியோகத்தர்கள் பதவிகளில் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வது நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்துகிறது என்பதை கணக்காய்வுக்குப் பல சந்தர்ப்பங்களில் அறிவித்துள்ளதாகவும், ஒவ்வொரு அரச நிறுவனங்களுக்கும் இந்தத் திணைக்களத்தின் இணையவழி அணுகல் மூலம் தகவல்களைப் நாளதுவரையாக்கப்படுவதற்கான வசதிகளை வழங்குவது குறித்தும், அந்த உள்ளக அலுவல்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 ஐ மீளாய்வு செய்வது குறித்தும் தேவையான நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடாக அமைச்சின் சுற்றறிக்கையின் 1.3.1 ஆம் பந்தி	ஒவ்வொரு வாகனத்திற்கும் 05 வருடங்களுக்கு ஒருமுறை மதிப்பீடு பெறுவது கட்டாயமாக இருந்தபோதிலும், இந்தத் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படவில்லை.	மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவரை வாகன மதிப்பீட்டிற்காக நியமிக்குமாறு கோரி கடிதமொன்று கையளிக்கப்பட்டதாகவும், அதற்கமைய, கடிதத்திற்கான பதிலாக, திணைக்களத்திடம் உள்ள அனைத்து வாகனங்களையும் ஒரே நாளில் பரிசோதனை செய்வதற்கு உத்தியேகத்தரொருவரை	குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நியமித்து அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செலவினத் தலைப்பு இலக்கம் 226-1-1-0-2103 இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கையப்படுத்தலின் கீழ், கொழும்பு துறைமுக கணினி வலையமைப்பு அமைப்பு வேலைகள், வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கான கணினி வலையமைப்பு அமைப்பு வேலைகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்காக 7 யுபிஎஸ் உபகரணங்கள் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக மொத்தமாக ரூபா 46.1 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் 0 வீதமாகவும், பௌதீக முன்னேற்றம் 5 வீதமாகவும் காணப்பட்டது.	• **கொழும்பு துறைமுக கணினி வலையமைப்பு அமைப்பு** 2024 ஆம் ஆண்டில் தேசிய போட்டி ஏல முறையின் கீழ் பெறுகை செயல்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மாற்றப்பட்டதால் பெறுகை செயல்பாட்டில் ஏற்பட்ட தாமதித்தமையும் செயற்திட்டத்திற்கு மீதமுள்ள வரையறுக்கப்பட்ட காலத்தினாலும், போட்டித்தன்மையைக் குறைக்கக்கூடிய வகையில், செயற்திட்டத்தை 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு இயலும் என குறிப்பிடப்பட்டிருந்தது. • **வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கான கணினி வலையமைப்பு** அவசரத் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், உரிய கொடுப்பனவுகளைச் செய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், குறித்த குழுவின் தீர்மானம் மற்றும் அமைச்சினால்	திட்டமிடப்பட்டவாறு பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

		வழங்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. • **மாகாண அலுவலகங்களுக்காக 07 UPS கொள்வனவு செய்தல்** 2024 ஆம் ஆண்டில் தேசிய போட்டி கேள்விப்பத்திர முறைமையின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், போதிய கால அவகாசம் இன்மையால் சந்தை விலைப்புள்ளி முறைமையின் கீழ் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டதாகவும், அதற்கு கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் திருப்திகரமான பதில் கிடைக்காததால், 2025 ஆம் ஆண்டில் தேசிய போட்டி கேள்விப்பத்திர முறைமையின் கீழ் பெறுகைகளை மேற்கொள்ள திணைக்களக் பெறுகை குழு தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், செலவினப் தலைப்பு இலக்கம் 226-1-1-0-2106 மென்பொருள் அபிவிருத்தியின் கீழ் வாகனப் பராமரிப்பு, இன்வென்டரி, மனித வளங்கள் II மற்றும் தரவு நகர்வு தொகுதிகளை நிறுவுவதற்காக மொத்தமாக ரூபா 54.2 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் மற்றும் பௌதிக முன்னேற்றம் ஆகிய இரண்டும் 0 சதவீதம் ஆக இருந்ததுடன், குறித்த பணி திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படவில்லை.	நிதி முன்னேற்றம் மற்றும் பௌதிக முன்னேற்றம் 0% ஆக இருப்பதற்கு மென்பொருள் அபிவிருத்தியின் கீழ் வாகனப் பராமரிப்பு மற்றும் இன்வெனடரி தொகுதிகளை மேற்கொள்வதற்கு ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் திணைக்களத்தின் தேவை மாற்றம் காரணமாக அத்தகைய மென்பொருள் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டியிருக்கவில்லை, மனித வளங்கள் II தொகுதி தொடர்பான திணைக்களத் தேவைகள் அடிக்கடி மாற்றங்களுக்கு உட்பட்டதால், அதன் நடவடிக்கைகள் தாமதமானமை மற்றும் தரவு நகர்வு தொகுதியை நிறுவி தரவு நகர்வுக்காக பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொழில்நுட்பப் பொருத்தமற்ற தன்மை காரணமாக	திட்டமிடப்பட்டவாறு பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

		தோல்வியடைந்தமை ஆகியவையே காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், 2025.05.28 ஆம் திகதி நிலவரப்படி மனித வளங்கள் II தொகுதியானது நிர்வாகப் பிரிவில் நிறுவப்பட்டு, பாவனையாளர் பரீட்சார்த்த மட்டத்தில் உள்ளதாகவும், தரவு நகர்வு தொகுதி தொடர்பில் திணைக்களத்தினால் பெறப்பட்ட Application Server Architecture மற்றும் Database Server Architecture என்பன தரவு நகர்வை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப ரீதியாகப் பொருத்தமற்ற தன்மைகள் காணப்பட்டதால், அதற்குப் பொருத்தமான Server ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	மீயாள்வு செய்யப்பட்ட ஆண்டில், செலவினப் தலைப்பு இலக்கம் 226-1-1-0-2106 மென்பொருள் அபிவிருத்தியின் கீழ் Change request, User interface updation மற்றும் Change of border control ஆகியவற்றுக்காக முறையே ரூபா 84 மில்லியன், ரூபா 9.5 மில்லியன் மற்றும் ரூபா 84.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் அதன் நிதி முன்னேற்றம் 0 சதவீதம் ஆக இருந்ததுடன், பௌதிக முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன்படி, குறித்த பணி திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படவில்லை.	திட்டமிட்டபடி பணிகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்களாக, Change request க்கான நடவடிக்கைகள் திணைக்களத்திற்குள் எழும் காலத்திற்குக் காலமான தேவைகளின் அடிப்படையில் அமைவதாகவும், அதற்காக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மதிப்பீடு செய்யப்படுவதாகவும், 2024 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட Change request களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்தமை மற்றும் கடந்த வருடத்தில் திணைக்களம் முகங்கொடுத்த நெருக்கடி நிலைமைகள் காரணமாக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான தேவையான அனுமதிகள் தாமதமானதால் வருடத்தில் கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்ய முடியாமை, User Interface Updating இற்காக திணைக்களம் தற்போது 2003 ஆம் ஆண்டில் பெறப்பட்ட version பயன்படுத்தி வருவதாகவும், புதுப்பிப்பதற்கு தற்போதுள்ள Database Server இடம்	திட்டமிடப்பட்டவாறு பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

	போதுமானதாக இல்லை எனக் அவதானிக்கப்பட்டதால், புதிய Database Server ஒன்றைப் பெற்றதன் பின்னர் உரிய புதுப்பித்தலை மேற்கொள்ளத் தீர்மானித்தமை மற்றும் Change of Border Control மென்பொருள் தொடர்பில் அவதானிப்பதற்காக வந்திருந்த சிங்கப்பூர் குழுவின் பரிந்துரையானது முழுமையான முறைமையையும் மீளாய்வு செய்து Business Process Re-engineering மேற்கொள்ள வேண்டும் என்பதாகும், அந்தக் காரியங்களின் பின்னர் இந்தக் பிணயை நிறைவேற்றத் தீர்மானித்தமை என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.	

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சாதாரண சேவைப் பிரிவின் கீழ் 133,315 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. இவற்றில் 75,832 கடவுச்சீட்டுகள் மட்டுமே, அதாவது சுமார் 57 வீதம், ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் சாதாரண சேவைப் பிரிவின் கீழ் பெறப்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பங்களில் 57,483 விண்ணப்பங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விநியோகிக்கப்படாமல் இருந்தன.	2024 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் போதுமானளவு வெற்று கடவுச்சீட்டு கையிருப்பு இல்லாத காரணத்தினால், சாதாரண சேவைக்கு விண்ணப்பித்த விண்ணப்பங்களில் தேவையை வரிசைப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாகத் குறிப்பிடப்பட்டிருந்தது.	கிடைபெற்றுள்ள கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கு விரைவாக கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2006 இன் பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.8.4 இன் பிரகாரம், திணைக்களக் பெறுகை குழுக்களுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் திணைக்களத் தலைவரினால் நியமிக்கப்படல் வேண்டும். ஆயினும், EPOSN PM 520 ரக ஸ்டிக்கர் அச்சுப்பொறிகள் 04 ஐ கொள்வனவு செய்வதற்கான உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிராததுடன், 2006 இன் பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.8.4(ஈ) இன் பிரகாரம், வீசா தொகுதியை புனரமைப்பது தொடர்பான பெறுகைக்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் குறித்த அமைச்சு அல்லது பெறுகை நிறுவகத்திற்கு புறம்பான பெறுகை விடயம் தொடர்பான அறிவுக் கொண்ட எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் பெறுகைகளின் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது.	கொள்வனவுகள் மேற்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	2006 இன் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.12(அ) இன் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும், அக்குழுக்களின் முதலாவது கூட்டத்தில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பான வர்த்தக இரகசியத்தன்மைக்கு மதிப்பளிப்பதாகவும், தமது பக்கச்சார்பின்மை மற்றும் நேர்மை குறித்தும், தனிப்பட்ட தொடர்பு இல்லை என்பது குறித்தும் உறுதியளித்து, நிர்ணயிக்கப்பட்ட படிவத்திலுள்ள	எதிர்வரும் பெறுகைகளின் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்தது.	கொள்வனவுகள் மேற்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	பிரகடனத்தில் கையொப்பமிட வேண்டும். ஆயினும், வீசா தொகுதியை புனரமைப்பது தொடர்பான பெறுகைக்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் இந்தப் பிரகடனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.		
(இ)	2006 இன் பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.14.1 இன் பிரகாரம் மற்றும் அதற்கிணங்க அரச நிதித் திணைக்களத்தினால் 2024 யூன் 25 திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் 40 இன் பிரகாரம், நேரடி ஒப்பந்த நடைமுறையைப் பின்பற்றும் போது, சிறிய ஒப்பந்தங்கள் - பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குவதற்கு சிபாரிசு செய்வதற்கான அதிகார எல்லை ரூ.500,000 வரை என நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தத் திணைக்களத்தினால் ரூ.1,196,700 (Without VAT) பெறுமதியான பணம் எண்ணும் இயந்திரங்கள் (Cash Counting) 03 கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விசாரணைச் சுற்றுப்பயணத்தின் போது முன்னாள் ஜனாதிபதி செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் 06 சறப் மற்றும் வீசா அங்கீகார சாளரங்கள் இயக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்கள மென்பொருட்களுடன் இணக்கமானதாக இருப்பதால், நேரடி பெறுகை முறைமையின் கீழ் உரிய பெறுகை வழிகாட்டல்கள் 2.14.1 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி மற்றும் அரச நிதித் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	அரச பெறுகை வழிக்காட்டி கோவை – 2006 இன் அத்தியாயம் 4 இன் 4.2.1(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம், பெறுகை பிரிவானது பிரதான பெறுகை திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதுடன், குறைந்தபட்சம் மூன்று வருட காலத்திற்கான எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகை திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டும். ஆயினும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் பிரதான பெறுகை திட்டம் ஒரு வருட	கணக்காய்வுடன் உடன்படுகின்றது எனவும், எதிர்காலத்தில் அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் பெறுகை திட்டங்கள் தயாரிப்பதற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.	பெறுகை வழிக்காட்டி பிரகரம் பெறுகை திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	காலத்திற்கு மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது.		
(உ)	EPOSN PM 520 ரக ஸ்டிக்கர் அச்சுப்பொறிகள் 04 ஐ கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் குழுவொன்றினால் அதன் இரண்டு உறுப்பினர்களால் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3(அ) இன் பிரகாரம், இந்தக் குழு நியமிக்கப்படுவதற்கு பெறுகை குழுவினால் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் பெறுகைகளின் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டதெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.	கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	சந்தை விலைப்புள்ளி முறைமையின் (shopping) கீழ் ரூ. 500,000 வரையிலான மூலதனச் சொத்துக் கொள்வனவுகளின் போது 03 கேள்விப்பத்திரங்களைப் பெற வேண்டியிருந்த போதிலும், EPOSN PM 520 ரக ஸ்டிக்கர் அச்சுப்பொறிகள் 04 ஐ கொள்வனவு செய்வது தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	கடந்த வருடத்தில் இந்தக் பெறுகைக்காக விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும், எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என கோவையின் இலக்கம் 01 இலுள்ள குறிப்புக்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அவசரத் தேவையின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் குறித்த பெறுகைக்காக மீண்டும் 10 நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்ட போதிலும், இரண்டு நிறுவனங்கள் மாத்திரமே விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளமை விடயக் கோவையின்படி அவதானிக்கப்பட்டுள்ளதால், அதன்படி இரண்டு நிறுவனங்களின் கேள்விப்பத்திர ஆவணங்கள் மாத்திரமே தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	பெறுகைத் திட்டத்தின்படி, 226-1-1-2106 செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 32 மில்லியன் நிதி ஒதுக்கீடு வீசா தொகுதியை புனரமைப்பது தொடர்பான பெறுகைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும்,	பெறுகை திட்டத்தின்படி, 226-1-1-2106 செலவினப் பிரிவின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 32 மில்லியன் என்றும், Informatics நிறுவனத்தினால் வீசா தொகுதி புனரமைப்புக்காக வழங்கப்பட்ட விலை ரூபா 36,993,178	பெறுகை திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு எல்லையினுள் பணிகள் மேற்கொள்ளப்படல்

இந்தக் பெறுகைக்கான மொத்தச் செலவாக ரூபா 37,751,950 செலவிடப்பட்டுள்ளதுடன், புதிய பெறுகை திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட ரூபா 5,751,950 மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.	என்றும், ரூபா 500,000 தள்ளுபடி வழங்கப்பட்டதன் பின்னர் கேள்விப்பத்திரப் பெறுமதியை ரூபா 31,993,178 வரை குறைப்பதற்கு Informatics நிறுவனம் இணங்கியதாகவும், அதன்படி வவுச்சர் பத்திரங்களின் பெறுமதி ரூபா 37,751,950 என்ற பெறுமதியை அடைந்திருப்பது ரூபா 31,993,178 + VAT என்பதனால் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனத் தேவையின் அடிப்படையில் இந்தக் பணி ஒரு முதன்மை பணியாக் கருதப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாகவும், மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டை மீறிய தொகை ஏனைய செயற்திட்டங்களைக் கைவிடுவதன் மூலம் பெறப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	வேண்டும்.

4.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	திணைக்களத்திற்கான செலவு ரூ. 29,850,000 ஆன மனித வள முகாமைத்துவத் தொகுதியின் Phase-I ஐ நிறுவுவதற்காக 2023 திசெம்பர் 29 அன்று ரூ. 16,200,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய UAT (User Accepting Testing) பரீட்சை மற்றும் பொறுப்பான உத்தியோகத்தரொருவரின் முறையான பரிந்துரை இன்றி உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தக் கணக்கறிக்கையின் திகதி வரை இந்தத் தொகுதியானது நிறுவனத்திற்குள் நிறுவப்படவோ அல்லது எந்த வகையிலும் பயன்படுத்தப்படவோ இல்லை.	மனித வளங்கள் தொகுதியை நிறுவுவதற்காக அந்த வருடத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி போதாமையினால், இந்தத் திட்டம் Phase-I மற்றும் Phase-II என இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட வேண்டியிருந்ததாகவும், Phase-I மாத்திரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகவும், இதனால் Phase-I இற்கு மாத்திரம் முறையான பரிந்துரைகளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொகுதியின் Phase-I மற்றும் Phase-II தற்போது திணைக்களத்தின் Server முறைமையில் நிறுவப்பட்டுள்ளதாகவும், தற்போது அதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள்	பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரின் முறையான பரிந்துரையுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, அது பயன்பாட்டிற்குப் பொருத்தமான நிலையில் உள்ளதா என்பது குறித்த உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும்.

		மற்றும் ஏனைய முறைமைகளுடன் ஒருங்கிணைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும், அந்த பணிகள் குறுகிய காலத்திற்குள் நிறைவுசெய்யப்படவுள்ளன என்றும், அந்தக் பணிகள் நிறைவுசெய்யப்பட்டவுடன் முழுமையாகப் பயன்படுத்த முடியும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.	
(ஆ)	மனித வள முகாமைத்துவத் தொகுதியின் Phase-I இற்கான ரூ. 16,200,000 கொடுப்பனவு தொடர்பான காசோலை 2024 யூலை 31 ஆம் திகதிக்குள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது செலுத்தப்படாத காசோலையாக நிலுவையிலிருந்ததுடன், 2024 ஆகஸ்ட் மாதத்தில் செலுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, ரூ. 16,200,000 ஆன தொகை 6 மாதங்களுக்கும் மேலாக கொடுப்பனவு தடை செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வுடன் உடன்படுவதாகவும், 2024 ஆகஸ்ட் மாதத்தில் காசோலை மாற்றப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	வழங்கப்பட்ட காசோலைகள் செலுத்துகைக்குத் தடைபடுவதற்கான காரணங்கள் கண்டறியப்படல் வேண்டும்.
(இ)	2022, 2023 மற்றும் 2024 (சனவரி முதல் ஏப்ரல் 16 வரை) ஆம் ஆண்டுகளுக்கான இலத்திரனியல் பயண அங்கீகார (ETA) முறைமையை உரிய நிறுவனத்தினால் பேணிவரும் போது, அத்த முறைமையின் சேவைகள் மற்றும் பராமரிப்புக்காகச் செலுத்த வேண்டிய பணத்தையும், நிறுவனத்தின் சின்னத்தை (ETA) முறைமை தொடர்பான இணையத்தளத்தில் காட்சிப்படுத்துவதற்காக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக வருடத்திற்கு ரூ.1,000,000 வீதம் ரூ.3,000,000 இனை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டில் ETA வசதி பெறுவதற்காக மாதாந்திர பராமரிப்பு, தொலைபேசி அழைப்புகள் மற்றும் ஆரக்கிள் தரவு அமைப்புக்காக தொடர்புடைய கம்பனிக்கு ரூ. 13,633,637 ஆன தொகை செலுத்துவதற்கான வவுச்சர்களைத் தயாரித்து நி.பி 115 இன் அங்கீகாரம் பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் ETA வசதிக்காக நிலுவைத் தொகையை செலுத்துவதற்குத் தேவையான அங்கீகாரம் பெறலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. தொடர்புடைய கம்பனியின் சின்னத்தை (ETA) தொடர்புடைய வலைத்தளத்தில் காண்பிப்பதற்காக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை செலுத்துமாறு கோரி 2021.08.06,	உரிய நிறுவனத்தினால் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய மற்றும் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		2022.10.26, 2023.04.21, 2024.08.05 மற்றும் 2024.12.20 ஆகிய திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டதாகவும், தொடர்புடைய தொகையை அறவிடப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	
(ஈ)	சாதாரண நடைமுறையின் கீழ் இணையவழியூடாகவும் விண்ணப்பதாரர்களினால் தனிப்பட்ட ரீதியிலும் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள் தொடர்பில் 2024 சனவரி மாதத்தில் 10 நாட்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனைக்கமைய, புதிய கடவுச்சீட்டுக்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்கள் பற்றிய பரிசோதனையின்போது, விண்ணப்பப் படிவங்கள் கையளிக்கப்பட்ட நாளிலிருந்து கடவுச்சீட்டு அச்சிடப்படும் வரையான காலம் 6 மாதங்களுக்கு மேல் தாமதமான 284 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.	சாதாரண நடைமுறையில் இணையவழியாக விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்ற நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குப் பின்னர் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வெளிநாட்டு கடவுச்சீட்டை வழங்குவது முந்தைய சாதாரண நடைமுறையாக இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் திணைக்களத்திடம் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டு கையிருப்பை முகாமைத்துவம் செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக, அவ்வாறு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மாத்திரம் கடவுச்சீட்டுக்களை வழங்கும் ஒரு நடைமுறை கணக்காய்வு மேற்கொள்ளப்படும் போது அமுலில் இருந்ததாகவும், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்குரிய கடவுச்சீட்டுக்கள் மேற்கூறிய நடைமுறையின் கீழ் விண்ணப்பதாரர்களின் முன்னுரிமைக் கோரிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள் எனவும், எனவே திணைக்களத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படாததால் தாமதம் ஏற்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	சாதாரண நடைமுறையின் கீழ் இணையவழியூடாக விண்ணப்பதாரர்கள் கைவிரல் அடையாளங்களைப் பெற்ற நாளிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(உ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கமைய, சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்கமைய, அடுத்த வருடத்திற்கான தொடர்ச்சியான மற்றும் மூலதன வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகை திட்டமானது, நடைமுறை ஆய்டின் டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டிய போதிலும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்திற்கான தொடர்ச்சியான வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வுடன் உடன்படுகின்றதுடன், எதிர்காலத்தில் அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிக்காட்டிகள் பிரகாரம் பெறுகைத் திட்டம் தாயரிப்பதற்கு தொடர்புடைய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது.	அரச நிதி சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிக்காட்டிகளுக்கு அமைவாக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	அரச பெறுகை வழிகாட்டி கோவை - 2006 இன் அத்தியாயம் 4 இன் 4.2.1(இ) இன் பிரகாரம், அடுத்தடுத்து வரும் வருடத்திற்கான பெறுகை நடவடிக்கைகள் விரிவாகப் பெறுகை கைநூலின் 4.2.1 ஆம் மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தினால் விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வுடன் உடன்படுகின்றதுடன், எதிர்காலத்தில் அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிக்காட்டிகள் பிரகாரம் பெறுகைத் திட்டம் தாயரிப்பதற்கு தொடர்புடைய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது.	அரச நிதி சுற்றறிக்கை மற்றும் பெறுகை வழிக்காட்டிகளுக்கு அமைவாக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(எ)	அரச பெறுகை வழிகாட்டி கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம், இலங்கை ரூபா 500,000 ஐ விட அதிகமான பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையை எழுதி கைச்சாத்திடல் வேண்டும் என்ற போதிலும், திணைக்களத்தினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட டோனர், காட்ரேஜ் மற்றும் நுகர்வுப் பொருட்கள் கொள்வனவின் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட அனைத்து கொள்வனவுகளுக்கும் ஒப்பந்தம் செய்துகொள்ள குறித்துக் கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	ரூபா 500,000 இற்கு மேற்பட்ட அனைத்து கொள்வனவுகளுக்கும் முறையான ஒப்பந்த உடன்படிக்கையை எழுதி கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஏ)	திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் Lexmark, Brother, Canon, HP, Ricoh மற்றும் Epson வகையிலான டோனர்கள் காட்றிஜ்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களைத் தொடர்ச்சியாக ஒரே வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இவ்வாறு தொடர்ச்சியாகக் கொள்வனவுகள் மேற்கொள்ளும் போது, கோரிக்கைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் அச்சிட்டுகள் பெற முடியுமா என்பது குறித்துத் தரப் பரிசோதனை மேற்கொண்டு, கோரப்பட்ட பொருட்களின் வினைத்திறனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினரால் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அத்தகைய தரப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் ஏனைய அரச நிறுவனங்களில் இந்தக் கிரியை முறைமை எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பது குறித்து ஆராய்ந்து, மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையைத் தயாரிப்பதற்காகக் குறித்துக்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	தொடர்புடைய கொள்வனவுகளுக்காக மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை நிறுவனத்திற்குள் ஸ்தாபிக்க வேண்டும்.
(ஐ)	குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமானது திணைக்களத்தின் கடவுச்சீட்டு, வீசா, பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள், பிரத்தியேகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், தனிப்பட்ட நிர்வாகம் போன்ற	திணைக்களத்தின் கணினி முறைமையானது கடவுச்சீட்டு விநியோகம், நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைய கறுப்புப் பட்டியலிடல், வீசா வழங்கல், பிரஜாவுரிமை வழங்கல், பிரத்தியேகக் கட்டுப்பாடு போன்ற	காலத்திற்கு ஏற்றவாறு தொடர்புடைய கணினி முறைமைகளை பேணிப் செல்லல் திணைக்களம்

	பல பணிகளைக் கணினி முறைமையின் உதவியுடன் மேற்கொள்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்துடன் 2003 யூன் 16 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதற்கான கணினி முறைமைப் பராமரிப்புச் செலவுகளையும் செலுத்தி, 2003 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான 22 வருட காலத்திற்கு அந்தத் தனியார் நிறுவனத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுவந்த போதிலும், குறித்த கணினி முறைமைகளைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளவில்லை.	மிகச் சிக்கலான விடயங்களை மேற்கொள்வதாகவும், Applications, Database, Networking, பாதுகாப்பு, Security போன்ற கூறுகளைக் கொண்டிருப்பதால், அந்தந்தக் கூறுகளை முகாமைத்துவம் செய்வதற்கு விசேட அறிவுடைய நபர்கள் அத்தியாவசியமானவர்கள் எனவும், இதுவரை திணைக்களத்திற்குள் தகவல் தொழில்நுட்ப பதவியணியினர் ஸ்தாபிக்கப்படவில்லை எனவும், Software Engineers, Data Base Administrators, Network Engineers மற்றும் Cyber Security Engineers போன்ற உத்தியோகத்தர்களை அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இதுவரை பொறிமுறையொன்று இல்லை எனவும், இத்தகையதொரு சூழ்நிலையில் அரச சேவையில் உயர் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் துறையின் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து இந்தக் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஒ)	அமைப்புக்களை பேணிப் செல்லல் தொடர்பாக திணைக்களத்திற்கும் தனியார் நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தங்கள் காலத்திற்கேற்ப நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் ஒப்பந்தக் காலம் முடிவடைந்து பல மாதங்களுக்குப் பிறகு தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் மற்றும் அந்த நிறுவனம் வழங்கும் சேவைகள் குறித்து திணைக்களம் திருப்தியடைவதாகக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) வழங்கும் சான்றிதழின் அடிப்படையில் ஒப்பந்தம் நாளதுவரையாக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் போது சனவரி 01 ஆம் திகதி என முந்திய திகதியிடப்பட்டு	ஆரம்ப ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தத்திற்கமையவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	ஒப்பந்தம் காலத்திற்கு ஏற்றவாறு நாளதுவரையாக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருந்தது.		
(ஓ)	ஒப்பந்தங்கள் காலத்திற்கேற்பப் நாளதுவரையாக்கப்படாத காரணத்தினால், கணினி முறைமைகளின் செயற்பாட்டில் கோளாறுகள் ஏற்பட்டால், அதனால் திணைக்களத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் எவ்வித சட்டரீதியான பாதுகாப்பும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.	தற்போது ஒப்பந்தங்கள் காலத்திற்கேற்பப் நாளதுவரையாக்கப்படுவத்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், எதிர்காலத்தில் சட்டரீதியான பிரச்சினைகள் ஏற்படுவதற்கான ஆபத்து குறைவடையும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.	ஒப்பநதம் காலத்திற்கு ஏற்ப நாளதுவரையாக்கப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஔ)	திணைக்களத்தினால் பேணப்பட்டுவரும் இந்தக் கணினி முறைமைகளை அபிவிருத்தி செய்தல், திருத்தம் செய்தல் போன்றன இந்தப் தனியார் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதனால், திணைக்களத்தின் தகவல்கள் வெளியே கசிதல், அந்தத் தகவல்களைப் பயன்படுத்தித் தவறுகள் அல்லது மோசடிகள் செய்வதற்கு வாய்ப்புள்ளதுடன் கடவுச்சீட்டு, வீசா, பிரஜாவுரிமைச் சான்றிதழ்கள் மற்றும் பிரத்தியேகக் கட்டுப்பாடு ஆகிய முறைமைகளின் தனிப்பட்ட இரகசியத்தன்மை பாதுகாக்கப்படாமை போன்ற விடயங்கள் தொடர்பில் ஆபத்து நிலவுகின்றது.	திணைக்களத்தில் கணினி முறைமைகளைப் பேணிப் செல்வதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப பதவியணி இதுவரை ஸ்தாபிக்கப்படவில்லை எனவும், Software Engineers, Data Base Administrators, Java Engineers போன்ற உத்தியோகத்தர்களை அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் தனியார் துறை நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து இந்தக் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	கணினி முறைமைகளைப் பேணிப் செல்வதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப பதவியணி நிறுவனத்திற்குள் ஸ்தாபிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(க)	கணினி முறைமைகளால் பயன்படுத்தப்படும் மென்பொருட்களுக்கான பயனர் கையேடுகள் மற்றும் பாய்ச்சல் வரைபடங்கள் காணப்படாததுடன், கணினி முறைமையின் மூலக் குறியீடுகளின் உரிமையானது மூன்றாம் தரப்பினரின் பொறுப்பில் இருந்தது.	2003 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் மூலக் குறியீடு ஆரம்பத்தில் இருந்த போதிலும், திணைக்களத்தின் தேவைக்கேற்ப அவ்வப்போது இந்த மூலக் குறியீடுகள் மாற்றப்பட்டுள்ளதாகவும், அதன் உரிமை தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அது தொடர்பான ஆலோசனைகள் கிடைத்தவுடன் அதற்கமைய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், மேலும்,	மூன்றாம் தரப்பினரிடம் உள்ள கணினி முறைமைகளின் மூலக் குறியீடுகளின் உரிமைகளைத் திணைக்களத்திடம் கையகப்படுத்துவத ற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

		மென்பொருட்களுக்கான பயனர் கையேடுகள் மற்றும் பாய்ச்சல் வரைபடங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிடப்பட்டிந்தது.	
(கா)	மீளாய்வாண்டில் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து 5 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட வேண்டிய ரூபா 53,257 ஆன தொகை, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 3-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 53,565 ஆன தொகை, 2021 நவம்பர் 09 ஆம் திகதி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 179,628 ஆன தொகை மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 1 வருடம் முதல் 10 வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 516,874 ஆகிய இடர் கடன் நிலுவைகளை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை திணைக்களத்தினால் அறவிட முடியாதிருந்தது.	மரணித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவையை அவரது மனைவியிடமிருந்து 2025 மே மாதம் முதல் அறவிடவும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தரின் கடன் நிலுவைத் தொகையை ஓய்வூதியத்திலிருந்து மாதாந்தம் அறவிடவும், சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவையை விசாரணை நிறைவடைந்ததன் பின்னர் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. சேவையை விட்டு விலகிச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகளை முறையே கட்டாய ஓய்வுபெறச் செய்தல் மூலம் ஓய்வூதியத்திலிருந்து அறவிடவும், பிணையாளர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிடவும், கடன் பணத்தைச் செலுத்துமாறு நினைவூட்டல் கடிதங்களை அனுப்பவும், கடனை தீர்க்கக நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு செய்யத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.	குறித்த கடன் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவக எடுக்கப்படல் வேண்டும்.

5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,422 ஆகவும்,	ஒவ்வொரு பதவிகளுக்குமுறிய வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென	நிலவுகின்ற வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல்

	உள்ளவாரான பதவியணியினர் 1,077 ஆகவும் இருந்ததுடன், மீளாய்வாண்டில் 345 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. இதற்கமைய, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 130 ஆல் அதிகரித்திருந்தது.	குறிப்பிடப்பட்டிருந்தது.	வேண்டும்.
(ஆ)	குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டாம் நிலை சேவை மட்டத்தில் செயற்பாட்டு உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 100 ஆக இருந்ததுடன், அவற்றில் 50 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது.	2024.12.31 இல் உள்ளவாறு 100 செயற்பாட்டு உதவியாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்ததாகவும், அவற்றில் 50 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், அதற்காக 2024.07.27 ஆம் திகதி பரீட்சை நடத்தப்பட்டு, 2024.12.03 மற்றும் 04 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து பொலிஸ் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும், அந்த அறிக்கைகள் கிடைத்தவுடன் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.	நிலவுகின்ற வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.